...திச் செய்யுள் நூல்கள் : மலர் - க.

அறப்பளீசுர சதக சாரம்

(அரும்பதவுரையுடன் கூடியது)

883
5 AUG 1931

பதிப்பாசிரியர் :
சென்னைத் தொண்டைமண்டலம் ஹைஸ்கூலில்
தமிழ்ப் பண்டிதராயிருந்த
மே. சக்கரவர்த்தி நயினர்.

Approved by the Text Book Committee

THE TEACHERS' PUBLISHING HOUSE,
EDUCATIONAL PUBLISHERS,
G.T., MADRAS.
1931

[Price As 3

O-, IMAV, A
N31
179994

புதுமுறை நீதிச் செய்யுள் நூல்கள் மலர் - க.

அறப்பளீசுர சதக சாரம்

(அரும்பதவுரையுடன் கூடியது)

5 AUG 1931

பதிப்பாசிரியர் :

சென்னைத் தொண்டைமண்டலம் ஹைஸ்கூலில்
தமிழ்ப் பண்டிதராயிருந்த

மே. சக்கரவர்த்தி நயினார்.

பதிப்பாளர் :

ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்

தம்பு செட்டித் தெரு, சென்னை.

பதிப்புரிமை] 1931 [விலை அணா 3.

2411
894'811

179994
சென்னை-600 008

THE PROGRESSIVE PRINTERS
17, CORAL MERCHANT ST., MADRAS

முன்னுரை

நீதி சதக வரிசையில் அறப்பளீசுர சதகம் என்பது ஒன்று. இது சதுரகிரி என்னுந் திருத்தலத்தில் அறப்பளீசுரம் என்னும் ஆலயத்தில் எழுந்தருளிய சிவபெருமானது திருப்பெயரைச் செய்யுள் தோறும் இறுதியில் அமைத்து, நீதிகள் பல விரவி வரப் பாடப்பெற்ற நூறு செய்யுட்கள் கொண்ட நன்னூலாகும். சதகம் என்பது நூறு எண்ணிக்கையை யுடையது என்பது பொருள். சதகம் என்பது வடமொழியில் நூறு என்னும் எண்ணிக்கையைக் குறிக்கும். அச்சொல் கப்பிரத்தியம் பெற்றுச் சதகம் என்று ஆயிற்று.

இந்நூலை ஆக்கிய ஆசிரியர் அம்பலவாணக் கவிராயர் என்பவர். இவர், சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னே, தில்லையாடி என்னும் ஊரில், வேளாளர் குலத்தில் தோன்றி, சீகாழியில் தங்கி, இராமநாடகம், சீகாழிப் புராணம், அநுமார் பிள்ளைத் தமிழ் முதலிய அரிய நூல்களைச் செய்து புகழ்பெற்ற சீகாழி அருணாசலக் கவிராயருடைய புதல்வர் மூவருள் மூத்தவர் என்பர்.

இவர் மதவேள் என்னும் ஒரு பிரபுவால் ஆதரிக்கப் பட்டு, அவரது ஞாபகார்த்தமாக இந்நூல் இயற்றினர் என்பதை, ஒவ்வொரு செய்யுளின் ஈற்றிலும் “அருமை மதவேள் அனுதினமு மனதினினை” என்று விசேடித்துக் கூறுமுகத்தான் அறியலாம். மேற்குறித்த பிரபு கொல்லி

மலையைச் சார்ந்த குண்டுணி நாட்டுத் தலைவராகிய கருமக் கவுண்டர் என்றும், அவரையே மதவேள் என்று இந் நூலில் குறிப்பிடப்பட்டு வருகின்றதென்றும், அவரது தந்தையே மோழைக் கவுண்டரென்றுஞ் சிலர் கூறுகிற்பர்.

இச்சதக நூலின் செய்யுட்கள் படிப்பதற்கு இனிமையாயும், பொருள் எளிதில் விளங்குவனவாயும், பல நீதிகளைக் கூறுவனவாயும் இயன்றிருத்தலின், தமிழ் நாட்டில் கல்விபயிலும் மாணவர்களுக்குப் பல காலமாகச் செய்யுள் பாடமாக இச்சதகம் வைக்கப்பட்டு வருகின்றது.

வித்தியா இலாகா பாடதிட்ட கால அளவுக்குத் தகுதியாகவும், பிள்ளைகளின் சிந்தனைசக்தியை வளர்க்கக்கூடியதாகவும் உள்ள ஒரு புதிய பதிப்பு வேண்டியதென்று எனது சக ஆசிரியர்கள் கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் விருப்பிற்கு இணங்கச் செய்யுட்களின் மூலத்தை ஒரு பகுதியாகவும், அவைகளுக்கு வேண்டிய அரும்பதவுரைகளைத் தெளிவாக எழுதி அநுபந்தமாகவும் சேர்த்து, அறப்பளீசுர சதக சாரம் என்னும் பெயருடன் இதனை வெளியிட்டிருக்கிறேன்.

இப்பதிப்பு புதிய முறையை அநுசரித்து வெளியாவதால் வித்தியா இலாகா அதிகாரிகளும், ஆசிரியர்களும் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இதனைச் செய்யுட் பாடபுத்தகமாக வைத்து ஆதரிக்கப் பிரார்த்திக்கின்றேன்.

குழப்பலூர்
27—4—1931

இங்ஙனம்,
மே. சக்கரவர்த்தி.

உ

கடவுள் துணை

அறப்பளீசுர சதக சாரம்

காப்புச் செய்யுள்

(வெண்பா)

விநாயகர் வணக்கம்

உம்பர்கோன் எம்பெருமான் ஓங்கறப்ப ளீசுரன்மேல்
பைம்பொருள்சே ருஞ்சதகம் பாடவே—அம்புவியோர்
ஆக்குந் துதிக்கையுளான் அன்புடையார்க் கின்பருளிக்
காக்குந் துதிக்கையுளான் காப்பு.

---

1. உயர் பிறப்பு

கடலுலகில் வாழுமுயிர் எழுபிறப் பினுள்மிக்க
காட்சிபெறு நரசென்ம மாய்க்
கருதப் பிறத்தலரி(து); அதினுமுயர் சாதியில்
கற்புவழி வருதல் அரிது ;
வடிவமுடன் அவயவங் குறையாது, பிழையாது,
வருத லது தனினும் அரிது ;
வந்தாலும் இதுபுண்யம் இதுபாவம் என்றெண்ணி
மாசில்வழி நிற்றல் அரிது ;

நெடியதன வானுதல் அரிது ; அதின் இரக்கமுள
நெஞ்சினேன் ஆதல் அரிது ;
நேசமுடன் உன்பதத்(து) அன்பனாய் வருதலிந்
நீணிலத் ததினும் அரிதாம்.
அடியவர்க் கமுதமே! மோழைபூ பதிபெற்ற
அதிபனெம தருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

2. நல்லபிள்ளையின் இலக்கணம்

தங்குலம் விளங்கிடப் பெரியோர்கள் செய்துவரு
தருமங்கள் செய்து வரலும்,
தன்மமிகு தானங்கள் செய்தலும், கனயோக
சாதகன் எனப் படுதலும்,
மங்குதல் இலாததன் தந்தைதாய் குருமொழி
மறுது வழி பாடு செயலும்,
வழிவழி வருந்தமது தேவதா பத்திபுரி
மார்க்கமும், தீர்க்கா யுளும்,
இங்கித குணங்களும், வித்தையும், புத்தியும்,
ஈகையும், சன்மார்க் கமும்,
இவையெலாம் உடையவன் புதல்வனும் ; அவனையே
ஈன்றவன் புண்யவா னும்.
அங்கச விரோதியே ! சோதியே ! நீதிசேர்
அரசனெம தருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

3. சகோதரர் ஒற்றுமை

கூடப் பிறந்தவர்க் கெய்துதுயர் தமதுதுயர்
கொள்சுகம் தஞ்சுகம் எனக், [கொள்
கொண்டுதாம் தேடுபொருள் அவர்தேடு பொருளவா
கோதில்புகழ் தம்புகழ் எனத்,
தேடுற்ற அவர்நிந்தை தந்நிந்தை தந்தவம்
தீதிலவர் தவமாம் எனச்,
சீவனொன் றுடல்வே றிவர்க்கென்ன ஐந்தலைச்
சீறரவ மணிவாய் தொறும்
கூடுற்ற இரையெடுத் தோருடல் நிறைத்திடுங்
கொள்கை போல் பிரிவின் றியே
கூடிவாழ் பவர்தம்மையே சகோ தரரெனக்
கூறுவது வே தரும மாம்.
ஆடிச் சிவந்த செந் தாமரைப் பாதனே!
அண்ணலெம தருமை மதவேள்
அனுதினமு மனதினினே தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

4. நல்ல மாணுக்கர் தன்மை

வைதாலும், ஓர்கொடுமை செய்தாலு மோ, சீறி
மாறு திகழ்ந்தாலு மோ,
மனது சற் ருகிலுங் கோணுது நாணுது
'மாதா பிதா எனக்குப்
பொய்யாமல் நீ'யென்று கனிவொடும் பணிவிடை
புரிந்து, 'பொருள் உடலாவியும்

புனிதஉன் றனதெனத் தத்தஞ்செய் திரவுபகல்
போற்றி, மலர் அடியில் வீழ்ந்து,
மெய்யாக வே பரவி, உபதேச மதுபெற
விரும்புவோர் நற்சீட ராம்.
வினேவேர் அறும்படி அவர்க்கருள்செய் திடுவதே
மிக்க தே சிகரது கடன்.
ஐயா! புரம் பொடி படச்செய்த செம்மலே!
அண்ணலெம தருமை மதவேள்
அனுதினமு மனதினினே தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

5. பொருளைப் போற்று முறை

புண்ணிய வசத்திறைற் செல்வமது வரவேண்டும்;
பொருளை ரட்சிக்க வேண்டும்;
புத்தியுடன் அதுவொன்று நூருக வே செய்து,
போதவும் வளர்க்க வேண்டும்;
உண்ணவேண் டும்;பின்பு நல்ல வஸ்த் ராபரணம்
உடலில் தரிக்க வேண்டும்;
உற்றபெரி யோர் கவிஞர் தம ரா துலர்க்குதவி,
ஓங்கு புகழ் தேட வேண்டும்;
மண்ணில்வெகு தருமங்கள் செயவேண்டும்; உயர்மோக்ஷ
வழிதேட வேண்டும்;
வறிதிற் புதைத்துவைத் தீயாத பேர்களே
மார்க்கம் அறியாக் குருடராம்.
அண்ணலே! கங்கா குலத்தலைவன் மோழைதரும்
அழகனெம தருமை மதவேள்

அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

6. தீவழி விலக்கு

வஞ்சகர் தமைக்கூடி மருவொணு(து); அன்பிலார்
வாசலிற் செல்லொணுது;
வாதெவர் இடத்திலும் புரியொணு(து); அறிவிலா
மடையர்முன் னிற்கொ ணுது;
கொஞ்சமே னுந்தீது செய்யொணு(து); ஒருவர்மேல்
குற்றஞ்சொ லொண்ணு(து); அயல்
கோதையர்க ளோடுபரி காசஞ்செ யொண்ணுது;
கோளுரைகள் பேசொ ணுது;
நஞ்சுதரும் அரவொடும் பழகொணு(து); இருள்வழி
நடந்துதனி ஏகொ ணுது;
நதிபெருக் கானதில் நீஞ்சல்செய் யொண்ணுது;
நல்வழி மறக்கொ ணுது.
அஞ்சாமல் அரசர்முன் பேசொணு(து); இவையெலாம்
அறியுமெம தருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

7. ஒன்றற்கு ஒன்று அழகு செய்வன

வாழ்மனை தனக்கழகு குலமங்கை; குலமங்கை
வாழ்வினுக் கழகு சிறுவர்;
வளர்சிறுவ ருக்கழகு கல்வி;கல் விக் கழகு
மாநிலந் துதிசெய் குணமாம்;

சூழ்குணம் அதற்கழகு பேரறிவு; பேரறிவு
தோன்றிடில் அதற் கழகுதான்
தூயதவ மேன்மை, உப காரம்,விரதம்,பொறுமை,
சொல்லரிய பெரியோர் களைத்
தாழ்தல்,பணிவிடை புரிதல், சீல,நே சங்,கருணை
சாற்றுமிவை யாமென்பர் காண்
சௌரிமல ரோனமரர் முனிவர்முச் சுடரெலாஞ்
சரணமெமை ரட்சி எனவே.
ஆழ்கடல் உதித்துவரு விடமுண்ட கண்டனே!
அண்ணலெம தருமை மதவேள்,
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

8. தகாத சேர்க்கை

பூததயை யில்லாத லோபிய ரிடத்திலே
பொருளை அருளிச் செய்தனை;
புண்ணியஞ் செய்கின்ற சற்சன ரிடத்திலே
பொல்லாத மிடி வைத்தனை;
கீதியகன் மூடர்க் கருந்ததி எனத்தக்க
நெறி மாதரைத் தந்தனை;
நிதானமுள உத்தமர்க் கிங்கிதம் இலாதகொடு
நீலியைச் சேர்வித்தனை;
சாதியில் உயர்ந்தபேர் ஈனர்பின் னே சென்று
தாழ்ந்து பரவச் செய்தனை;
தமிழருமை அறியாத புல்லர்மேற் கவிவாணர்
தாம் பாடவே செய் தனை;

ஆதரவி லாம லிப் படி செய்த தென்சொலாய்?
அமல! எம தருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

9. செய்யத்தக்க கருமங்கள்

வாலிபந் தனில் வித்தை கற்கவேண் டும்; கற்ற
வழியிலே நிற்க வேண்டும்;
வளைகடல் திரிந்து பொருள் தேடவேண் டும்; தேடி
வளரறஞ் செய்ய வேண்டும்;
சீலமுடை யோர்களைச் சேரவேண் டும்; பிரிதல்
செய்யா திருக்க வேண்டும்;
செந்தமிழ்ப் பாடல்பல கொள்ளவேண் டும்; கொண்டு
த்யாகம் கொடுக்க வேண்டும்;
ஞாலமிசை பலதரும நாட்டவேண் டும்; நாட்டி
நன்றாய் நடத்த வேண்டும்;
நம்பனிணை அடிபூசை பண்ணவேண் டும்; பண்ணி
னாலு மிகு பக்தி வேண்டும்.
ஆலமமர் கண்டனே! பூதியணி முண்டனே!
அனகவெம தருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

10. மேன்மேலுயர்ச்சி

தன்மட்டில் இரவாது சீவனஞ் செய்பவன்
சாமர்த்திய முள புருடனாம்;

சந்ததம் பதின்மரைக் காப்பாற்று வோன் மிக்க
தரணிபுகழ் தரு தேவனும்;
பொன்மட்டி லாம வீந் தொருநூறு பேரைப்
புரப்பவன் பொருவில் இந்திரன் ;
புவிமீதில் ஆயிரம் பேர்தமைக் காப்பாற்றும்
புண்யவா னே பிரம னும் ;
நன்மைதரு பதினாயிரம்பேர் தமைக் காத்து
ரட்சிப்ப வன் செங்கண் மால் ;
நாளுமிவன் மே லதிக மாக வெகு பேர்க்குதவு
நரனே மகாதேவ னும்.
அன்மட்டு வார்குழலி பாகனே! ஏகனே!
அண்ணலெம தருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

11. செயற்கருஞ் செயல்

நீர்மேல் நடக்கலாம்; எட்டியுந் தின்னலாம்;
நெருப்பை நீர்போல் செய்யலாம்;
நெடியபெரு வேங்கையைக் கட்டியே தழுவலாம்;
நீளரவி னைப் பூண லாம்;
பார்மீது மணலைச் சமைக்கலாம்; சோறெனப்
பட்சமுடனே உண்ணலாம்;
பாணமொடு குண்டு விலகச் செய்ய லாம்; மரப்
பாவை பே சப் பண்ண லாம்;

ஏர்மேவு காடியுங் கடையுற்று வெண்ணெயும்
எடுக்கலாம்; புத்தி சற்றும்
இல்லாத மூடர்த மனத்தைத் திருப்பவே
எவருக்கு முடியாது காண்.
ஆர்மேவு கொன்றைபுனை வேணியா! சுரர்பரவும்
அமலனே! அருமை மதவேள
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

12. உத்தமராவோர்

அடைக்கலம் எனத் தேடி வருவோர் தமைக் காக்கும்
அவனே மகா புருடனும்;
அஞ்சாமல் எதுவரினும் எதுபோகி னுஞ் சித்தம்
அசைவிலான் மகா தீரனும்;
தொடுத்தொன்று சொன்னசொல் தப்பாது செய்கின்ற
தோன்றலே மகா ராசனும்;
தூறிக் கலைக்கின்ற பேர் வார்த்தை கேளாத
துரையே மகாமேரு வாம்;
அடுக்கின்ற பேர்க்குவரும் இடர்தீர்த் திரட்சிக்கும்
அவனே மகா த்யாகியாம்;
அவரவர் தராதரம் அறிந்து அறிந்து மரி யாதைசெயும்
அவனே மகா உசிதனும்;
அடர்க்கின்ற முத்தலைச் சூலனே! லோலனே!
அமலனே! அருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

13. இலக்குமி வாழிடங்கள்

நற்பரி முகத்திலே, மன்னவர் இடத்திலே,
நாகரிகர் மா மனையிலே,
நளினமலர் தன்னிலே, கூவிளந் தருவிலே,
நறைகொண்ட பைந்துள விலே
கற்புடையர் வடிவிலே, கடலிலே, கொடியிலே,
கல்யாண வாயில் தனிலே,
கடிநகர் இடத்திலே, நற்செங்நெல் விளைவிலே,
கதிர்பெறு விளக்க தனிலே,
பொற்புடைய சங்கிலே, மிக்கோர்கள் வாக்கிலே,
பொய்யாத பேர் பாலிலே,
பூந்தடந் தன்னிலே, பாற்குடத் திடையிலே,
போதகத் தின் சிரசிலே,
அற்பொருங் கோதைமலர் மங்கைவாழ் இடமென்பர்.
அண்ணல்! எம தருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

14. மூதேவி வாழிடங்கள்

மிதமின்றி அன்னம் புசிப்போர் இடத்திலும்,
மிருபாஷை யோரிடத் தும்,
மெய்யொன் றிலாமலே பொய்பேசி யே திரியும்
மிக்க பா தகரிடத் தும்,
கதியொன் றும் இலர்போல மலினங் கொளும் பழைய
கந்தை யணி வோரிடத் தும்,

கடிநாய் எனச்சீறி எவரையும் சேர்க்காத
கன்னிவாழ் மனையகத் தும்,
ததிசேர் கடத்திலும், கர்த்தபத் திடையிலும்,
சார்ந்த ஆட்டின் றிரளிலும்,
சாம்பிண முகத்திலும், இவையெலாங் கவலைபுரி
தௌவைவாழ் இடமென்பர் காண்.
அதிரூப மலைமங்கை நேசனே! மோழைதரும்
அழகனெம தருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

15. குணகுணம் இரண்டினும் பயன்படாதவை

குணமற்ற பேய்முருங் கைத்தழை தழைத்தென்ன
குட்டநோய் கொண்டும் என்ன?
குரைக்கின்ற நாய்மடி சுரந்தென்ன, சுரவாது
கொஞ்சமாய்ப் போகில் என்ன?
மணமற்ற செம்முருக் கதுபூத் தலர்ந்தென்ன,
மலராது போகில் என்ன?
மதுரமில் லா வுவர்க் கடனீர் கறுத்தென்ன,
மாவெண்மை ஆகில் என்ன?
உணவற்ற பேய்ச்சுரை படர்ந்தென்ன, படரா (து)
உலர்ந்துதான் போகில் என்ன?
உதவாத பேர்க்குவெகு வாழ்வுவந் தாலென்ன
ஓங்குமிடி வரிலென்ன காண்?
அணியுற்ற பைங்கொன்றை மாலிகா பரணனே!
ஆதியே! அருமை மதவேள்

அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

16. குறைவுற்றுங் குணங் கெடாமை

தறிபட்ட சந்தனக் கட்டை பழுதாயினுஞ்
சார்மணம் பழு தாகுமோ?
தக்கபால் சுவறிடக் காய்ச்சினும் அதுகொண்டு
சாரமது ரங் குறையு மோ?
நிறைபட்ட கதிர்மணி அழுக்கடைந் தாலுமதின்
நீள்குண மழுங்கி விடுமோ ?
நெருப்பிடை உருக்கினும் அடிக்கினும் தங்கத்தின்
நிறையு மாற் றுங் குறையுமோ?
கறைபட்ட பைம்புயன் மறைத்தாலும் அதுகொண்டு
கதிர்மதி கனம் போகுமோ?
கற்றபெரி யோர்மகிமை அற்ப ரறி கிலரேனும்
காசினி தனிற் போகுமோ ?
அறிவுற்ற பேரைவிட் டகலாத மூர்த்தியே
ஐயனே! அருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

17. நற்குணங்கட்கு இடமாகாதவர்

வெறிகொண்ட மற்கடம், பேய் கொண்டு கள்ளுண்டு
வெங்காஞ் சொறிப் புதலிலே
வீழ்ந்துதேள் கொட்டிடச் சன்மார்க்கம் எள்ளளவும்
மேவுமோ? மேவாது போல்,

குறைகின்ற புத்தியாய், அதிலற்ப சாதியாய்க்,
கூடவே இளமை யுண்டாய்க்,
கொஞ்சமாம் அதிகார முங் கிடைத்தால், மிக்க
குவலயந் தனி லவர்க்கு,
நிறைகின்ற பத்தியுஞ், சீலமும், மேன்மையும்
நிதானமும், பெரியோர்கண் மேல்
நேசமும், ஈகையும், இவையெலாம் கனவிலும்
நினைவிலும் வாராது கண்டாய்.
அறைகின்ற சுருதியின் பொருளான வள்ளலே!
அண்ணலே! அருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

18. இதனால் இன்னமுறையனும் எனல்

தன்னால் முடிக்கவொண் ணாத காரியம் வந்து
தான்முடிப்போன் தமைய னாம்;
தன்றனைக் கிடர்வந்த போதுமீட் டுதவுவோன்
தாய்தந்தை என்னல் ஆகும்;
ஒன்னார் செயுங்கொடுமை யால் மெலிவு வந்தபோ(து)
உதவுவோன் இட்ட தெய்வம்;
யுத்திபுத் திகள் சொல்லி மேல்வருங் காரியம்
உரைப்பவன் குருவென்ன லாம்;
எந்நாளும் வருநன்மை தீமை தன தென்னவே
எண்ணிவரு வோன் பந்துவாம்;
இருதயம் அறிந்துதன் சொற்படி நடக்குமவன்
எவனெனினும் அவனே சுதன்.

அங்கார மும்பணியும் எங்நாளு மே புனையும்
அண்ணலே! அருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

19. கூடிற் பயன்படல்

செத்தைபல கூடியொரு கயிருயின், அதுகொண்டு
திண்கரியை யுங் கட்ட லாம்;
திகழ்ந்தபல துளிகூடி ஆருயின், வாவியொடு
திரளேரி நிறைவிக்க லாம்;
ஒத்தநுண் பஞ்சுபல சேர்ந்து நூ லாயிடின்,
உடுத்திடுங் கலையாக்க லாம்;
ஓங்கிவரு கோலுடன் சீலையுங் கூடினல்,
உயர்கவிகை யாக் கொள்ளலாம்;
மற்றுமுயர் தண்டுலத் தோடு தவி டுமி கூடின்,
மல்குமுளை விளை விக்கலாம்;
மனமொத்த நேயமொடு கூடியொருவர்க் கொருவர்
வாழின், வெகு வெற்றி பெறலாம்.
அற்றகனி யைப்பொருத் தரிபிரமர் தேடரிய
அமலனே! அருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

20. ஒன்று இல்லாமையாற் பாழ்படல்

தாம்பூல தாரணம் இலாததே வருபூர்ண
சந்த்ரனிகர் முக சூனியம்;

சற்சனர் இலாததே வெகுசனஞ் சேர்ந்துவாழ்
தரும் பெரிய நகர் சூனியம் ;
மேம்பா டிலாத மன் னவர்கள் வந் தாள்வதே
மிக்க தேசச் சூனியம் ;
மிக்கசற் புத்திரன் இலா ததே நலமான
வீறுசேர் க்ருக சூனியம் ;
சோம்பாத தலைவரில் லாததே வளமுடன்
சொல்லுயர் சாப சூனியம் ;
தொல்லுலகில் அனைவர்க்கு மாநிதியம் இல்லதே
சுத்தசூ னியமென்பர் காண்.
ஆம்பல்வத னத்தனைக் குகனையீன் றருள்செய்த
அத்தனே ! அருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

21. மூடர் தாரதம்மியம்

பெண்புத்தி கேட்கின்ற மூடரும், தந்தைதாய்
பிழை புறஞ் சொலு மூடரும்,
பெரியோர்கள் சபையிலே முகமேடேறி வந்தது
பிதற்றிடும் பெரு மூடரும்,
பண்புற்ற சுற்றஞ் சிரிக்கவே இழிவான
பழிதொழில் செய்திடு மூடரும்,
பற்றற்ற பேர்க்குமுன் பிணைநின்று பின்புபோய்
பரிதவித்திடு மூடரும்,
கண்கெட்ட மாடென்ன ஓடி இர வலர்மீது
காய்ந்து வீழ்ந்திடு மூடரும்,

கற்றறி விலாத முழு மூடருக்(கு) இவரெலாங்
காண்மூடர், அரைமூடர் காண்.
அண்கற்ற நாவலர்க் காகவே தூதுபோம்
ஐயனே! அருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

22. இதற்கு இதுவேண்டும் எனல்

தனக்குவெகு புத்தியுண் டாகினும் வேறொருவர்
தம்புத்தி கேட்கவேண்டும்;
தானதிக சூரனே யாகினுங் கூடவே
தளசேக ரங்கள் வேண்டும்;
கனக்கின்ற வித்துவான் ஆகினுந் தன்னினுங்
கற்றோரை நத்தவேண்டும்;
காசினியை ஒருகுடையில் ஆண்டாலும் வாசலிற்
கருத்துள்ள மந்த்ரி வேண்டும்;
தொனிக்கின்ற சங்கீத சாமர்த்யன் ஆகிலுஞ்
சுதிகூட்ட ஒருவன் வேண்டும்;
சுடர்விளக் காயினும் நன்றாய் விளங்கிடத்
தூண்டுகோல் ஒன்று வேண்டும்.
அனக்கண்ண னே!படிக சங்கநிகர் வண்ணனே!
ஐயனே! அருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

23. வறுமையின் கொடுமை

மேலான சாதியில் உதித்தாலும் அதிலென்ன,
வெகுவித்தை கற்றும் என்ன,
மிக்கு வதி ரூபமொடு சற்குணம் இருந்தென்ன,
மிகுமானி யாகில் என்ன,
பாலான மொழியுடையனு பென்ன, ஆசார
பரனு யிருந்து மென்ன,
பார்மீது வீரமொடு ஞானவா னு யென்ன,
பாக்கிய மிலாத போது.
வாலாய மாய்ப் பெற்ற தாயுஞ் சலித்திடுவள்;
வந்த சுற் றமு மிகழு மே;
மரியாதை யில்லாமல் அனைவரும் பேசுவார்;
மனைவியும் தூறு சொல்வாள்.
ஆலாலம் உண்டகனி வாயனே! நேயனே!
அனகனே! அருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

24. ஈனத்துவம்

இரப்பவன் புவிமீதில் ஈன(ன்); அவ னுக் கில்லை
என்னுமவன் அவனில் ஈனன்;
ஈகின்ற பேர்தம்மை ஈயாமலே கலைத்
திடுமூடன் அவனில் ஈனன்;
உரைக்கின்ற பேச்சிலே பலனுண் டெனக்காட்டி.
உதவிடான் அவனில் ஈனன்;

உதவவே வாக்குரைத் தில்லையென் றேசொலும்
உலுத்தனே அவனில் ஈனன் ;
பரக்கின்ற யாசகர்க் காசைவார்த் தைகள் சொலிப்
பலகால் அலைந்து திரியப்
பண்ணியே யில்லையென் றிடுகொடிய பாவியே
பாரிலெல் லார்க்கும் ஈனன்.
அரக்கிதழ்க் குமுதவாய் உமைநேச னே! எளியர்
அமுதனே! அருமை மதவேள்
அனுதினமு மனதினினை தரு சதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

25. நன்னகர்

வாவிபல கூபமுடன் ஆறருகு சேர்வதாய்,
மலைகாத வழியின் உளதாய்,
வாழைகமு கொடுதெங்கு பயிராவ தாய்ச், செந்நெல்
வயல்கள் வாய்க்கால்கள் உளதாய்,
காவி கம லங் குவளை சே ரேரி உள்ளதாய்க்,
கனவர்த்த கர்கள் மறைவலோர்
காணரிய பலகுடிகள் நிறைவுள்ள தாய், நல்ல
காவலன் இருக்கை யுளதாய்த்,
தேவரா லயம் ஆடல் பாடல் அணி மாளிகை
சிறக்க வுளதாய்ச், சற்சனர்
சேருமிட மாகுமோர் ஊர்கிடைத் ததிலதிக
சீவனமு மே கிடைத்தால்,
ஆவலோ டிருந்திடுவ தே சொர்க்க வாசமென்று
அறையலாம், அருமை மதவேள்

அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

26. முழுக்காடு நாள்

வரு மாதி வாரந் தலைக்கெண்ணெய் ஆகாது,
வடிவமிகும் அழகு போகும் ;
வளர்திங்க ளுக் கதிக பொருள்சேரும் ; அங்கார
வாரந் தனக் கிடர் வரும் ;
திருமேவு புதனுக்கு மிகுபத்தி வந்திடும் ;
செம்பொனுக் குயா றிவு போம் ;
தேடிய பொருட்சேத மாம் வெள்ளி ; சனிஎண்ணெய்
செல்வமுண் டாயுள் உண்டாம்.
பரிகாரம் உள தாதி வாரந் தனக் கலரி ;
பௌமனுக் கான செழுமண் ;
பச்சறுகு பொன்னவற் காம் ; எருத் தூ ளொளிப்
பார்க்கவற் காகும் எனவே
அரிதா அறிந்தபேர் எண்ணெய்சேர்த்தே முழுக்
காடுவார், அருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

27. மருத்துவன் இலக்கணம்

தாதுப் பரீக்ஷை வரு கால தேசத்தொடு
சரீரலட் சண மறிந்து
தன்வந்த்ரி கும்பமுனி தேரர் கொங்கணர் சித்தர்
தமது வா கட மறிந்து

பேதப் பெருங்குளிகை சுத்திவகை மாத்திரைப்
பிரயோக மோடு பஸ்மம்
பிழையாது மண்டூர செந்தூர லட்சணம்
பேர்பெறுங் குணவாக டம்
சோதித்து மூலிகா விதநிகண் டுங் கண்டு
தூய தைலம் லேகியம்
சொல்பக்கு வங் கண்டு வருரோக நிண்ணயம்
தோற்றியே அமிர்த காமாய்
ஆதிப் பெருங்கேள்வி யுடைய ஞ யுர்வேதன்
ஆகும், எமதருமை மதவேள்
அனுதினமு மனதினினே தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

28. வீணர் இவரெனல்

வேட்டகஞ் சேர்வோரும் வீணரே; வீணரை
விரும்புவோர் அவரின் வீணர்;
விருந்துகண் டில்லாள் தனக்கஞ்சி ஒடிமறை
விறகிலோர் அவரின் வீணர்;
நாட்டந் தருங்கல்வி யில்லோரும் வீணரே;
நாடியவர் மேற்கவி சொல்வார்
நானிலந் தனில் வீணர்; அவரினும் வீணரே
நரரைச் சுமக்கும் எளியோர்
தேட்டறிவி லாதபெரு வீணரே; அவரினுஞ்
சேரொருவர் அத்தம் இன்றிச்
செலவுசெய் வோரதிக வீணராம்; வீணனுய்த்
திரியுமெளி யோனே யாட் கொண்(டு)

ஆட்டம் செயும் பதாம் புய முடியின் மேல்வைத்த
அமலனே! அருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்,
அறப்பளீ சுர தேவனே.

29. இவையே போதும் எனல்

பொய்யாத வாய்மையுஞ் சீலமுஞ் சார்ந்துளோர்
பூவலஞ் செயவேண்டு மோ?
பொல்லாத கொலைகள விலாத நன் னெறியுளோர்
புகழறஞ் செயவேண்டு மோ?
நையாத கர்மத்தை லோபத்தை விட்டபேர்
நல்லறஞ் செயவேண்டு மோ?
நன்மனே சுத்தியுண் டானபேர் மேலுமொரு
நதிபடிந் திடவேண்டு மோ?
மெய்யாநின் அடியரைப் பரவுவோர் உன்பதம்
விரும்பி வழிபட வேண்டுமோ?
வேதியர் தமைப் பூசை பண்ணுவோர் வானவரை
வேண்டி யர்ச் சனைசெய்வ ரோ?
ஐயா றுடன்கமலை சோண சலந் தில்லை
அதிபனே! அருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

30. அரியராவோர்

பதின்மரில் ஒருத்தர் சபை மெச்சிடப் பேசுவோர்;
பாடுவோர் நூற்றில் ஒருவர்;

பார்மீதில் ஆயிரத் தொருவர் விதி தப்பாது
பாடிப்ர சங்கமிடுவோர்;
இதனருமை அறிகுவோர் பதினா யிரத் தொருவர்;
இதையறிந் திதய மகிழ்வாய்
ஈகின்ற பேர் புவியி லேயருமை யாகவே
இலக்கத்தி லே யொருவ ராம்;
துதிபெருக வருமூன்று காலமும் அறிந்த மெய்த்
தூயர் கோ டியிலொருவ ராம்;
தொல்லுலகு புகழ் காசி ஏகாம் பரங் கைலை
சூழும் அவினாசி பேரூர்
அதிகமுள வெண்காடு செங்காடு காளத்தி
அத்தனே! அருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

31. கோடி உடுக்கும் நாள்

கறைபடா தொளிசேரும் ஆதிவா ரந்தனில்
கட்டலாம் புதிய சீலை.
கலைமதிக் காகாது; பலகாலு மழையினில்
கடிது நனைவுற் றழிதரும்.
குறைபடா திடர்வரும், வீரியம் போம் அரிய
குருதிவா ரந்தனக்கு.
கொஞ்நா ளிற் கிழியும், வெற்றிபோம் புந்தியில்
குருவார மதி லணிந்தால்
மறைபடா தழகுண்டு, மேன்மேலும் நல்லாடை
வரும். இனிய சுக்கிரற்கோ

வாழ்வுண்டு, திருவுண்டு; பொல்லாத சனியற்கு
வாழ்வுபோம், மரணமுண்டாம்,
அறைகின்ற வேதாகமத்தின் வடிவாய் விளங்(கு)
அமலனே! அருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

32. சகுன பலன்

சொல்லரிய கருடன், வானர(ம்), அரவ(ம்), மூஞ்சூறு,
சூகரம், கீரி, கலைமான்,
துய்யபா ரத்வாசம், அட்டை, எலி, புன்கூகை,
சொற்பெருக மருவு மாந்தை,
வெல்லரிய காடி, காட் டான், பூனை, புலி, மேல்
விளங்கு மிரு நா உடும்பு,
மிகவுரைசெய் இவையெலாம் வலமிருந் திடமாகில்
வெற்றியுண் டதிக நலமாம்;
ஒல்லையின் வழிப்பயண மாகுமவர் தலைதாக்கல்,
ஒருதுடை யிருத்தல், பற்றல்,
ஒருதும்மல், ஆணையிடல், இருமல், போ கேலென்ன
உபசுருதி சொல் இவை யெலாம்,
அல்லல்தரு நல்லவல வென்பர்; முதி யோர் பரவும்
அமலனே! அருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

33. நற்பொருளில் குற்றம்

பேரான கங்கா நதிக்கு மதன் மேல்வரும்
பேனமே தோஷ மாகும்;
பெருகி வளர் வெண்மதிக் குள்ளுட் களங்கமே
பெரிதான தோஷ மாகும்;
சீரார் தபோதனர்க் கொருவர்மேல் வருகின்ற
சீற்றமே தோஷ மாகும்;
தீதின்முடி மன்னவர் விசாரித் திடாதொன்று
செய்தல் அவர் மேற் றோஷ மாம்;
தாராள மாமிகத் தந்துளோர் தாராமை
தான் இரப் போர் தோஷம் ஆம்;
சாரமுள நற் கருப் பஞ்சாறு கைப்ப தவர்
தாலஞ்செய் தோஷம் ஆகும்;
ஆராயும் ஒருநான் மறைக்குமெட் டாதொளிரும்
அண்ணலே! அருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

34. மாணிக்கத்திற் கொப்பான பொருள்

சுழிசுத்த மாயிருந் ததிலும் படைக்கான
துரகமோர் மாணிக்கம் ஆம்;
சூழ்புவிக் கரசனுய் அதிலே விவேகமுள
துரையுமோர் மாணிக்கம் ஆம்;
பழுதற்ற அதிரூப வதியுமாய்க் கற்புடைய
பாவையோர் மாணிக்கம் ஆம்;

பலகலைகள் கற்றறி அடக்கமுள பாவலன்
பார்க்கிலோர் மாணிக்கம் ஆம்;
ஒழிவற்ற செல்வனுய் அதிலே தியாகியாம்
உசிதனோர் மாணிக்கம் ஆம்;
உத்தம குலத்துதித் ததிலுமோ மெய்ஞ்ஞானம்
உடையனோர் மாணிக்கம் ஆம்,
அழிவற்ற வேதாக மத்தின் வடி வாய் விளங்கு
அமலனே! அருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

35. கவிஞன் இலக்கணம்

தெள்ளமிர்த தாரையென மதுரங் கதித்த பைந்
தேன்மடை திறந்ததென வே,
செப்புமுத் தமிழினொடு நாற்கவிதை நாற்பொருள்
தெரிந்துரைசெய் திறமையுடனே,
விள்ளரிய காவியத் துட்பொருள் அலங்காரம்
விரிவிலக் கண விகற்பம்
வேறுமுள தொன்னூல் வழக்கு முலை கத்தியல்பும்
மிக்க ப்ர பந்த வண்மை
உள்ளவெல் லா மறிந் தலையடங் குங்கடலை
ஒத்த திக சபை கண்ட போ(து)
ஓங்கலை ஒலிக்கின்ற கடல்போற் ப்ர சங்கம(து)
உரைப்பவன் கவிஞ னாகும்;

அள்ளிவிட முண்ட கனி வாயனே! நேயனே!
அமலனே! அருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

36. நல்லோரிணக்கம் நன்மையெனல்

காணரிய பெரியோர்கள் தரிசனம் லபிப்பதே
கண்ணிணைகள் செய்புண்ணி யம்;
கருணையாய் அவர்சொன் மொழி கேட்டிட லபிப்பதே
காதுசெய் திடு புண்ணி யம்;
பேணியவர் புகழையே துதிசெய லபித்திடுதல்
பேசில்வாய் செய் புண்ணி யம்;
பிழையாமல் அவர்தமைத் தொழுதிட லபிப்பது கை
பெரிது செய்திடு புண்ணியம்;
வீணெறி செலாமல் அவர் பணிவிடை லபிப்பது தன்
மேனி செய் திடு புண்ணியம்;
விழைவொடவர் சொற்படி நடந்திட லபிப்பதே
மிக்க பூ ருவ புண்ணி யம்,
ஆணவ மெனுங் களை களைந் தறி வினைத் தந்த
அண்ணலே! அருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

37. தானுதிபதி மந்திரி சேனுதிபதிகளின் இயல்பு

தன்னரசன் வலிமையும், பரராசர் எண்ணமும்,
சால மேல் வழி கருமமும்,

தானறிந்(து), அதிபுத்தி யுத்தி யுண் டாயினோன்
தானாதிபதி யாகுவான்.
மன்னர் மனத்தையும், கால தேசத்தையும்,
வாழ்குடி படைத் திறமையும்,
மந்திரா லோசனையும், எல்லாம் அறிந்தவன்
வளமான மதி மந்திரி.
துன்னிய படைக்குணம், கரிபரி பரீக்ஷையே,
சூழ்பகைவர் புரி சூழ்ச்சியும்,
தோலாத வெற்றியும், திடமான சித்தியுள
சூரனே சேனாதி பன்,
அன்னையினும் நல்ல மலை பங் காளனே!
அனகனே! அருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

38. கோபத்தின் கொடுமை

கோபமே பாவங்க ளுக்கெலாந் தாய்தந்தை;
கோபமே குடி கெடுக்கும்;
கோபமே ஒன்றையுங் கூடிவர வொட்டாது;
கோபமே துயர் கொடுக்கும்;
கோபமே பொல்லாது; கோபமே சீர்கேடு;
கோபமே உறவறுக்கும்;
கோபமே பழிசெயும்; கோபமே பகையாளி;
கோபமே கருணை போக்கும்;
கோபமே ஈனமாம்; கோபமே எவரையுங்
கூடாமல் ஒருவன் ஆக்கும்;

கோபமே மறலிமுன் கொண்டுபோய்த் தீய நர
கக்குழியி னிற் றள்ளு மால்,
ஆபத்தெலாந் தவிர்த் தென்னையாட் கொண்டருளும்
அண்ணலே! அருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

39. பகை கொளத் தகாதவர்

மன்னவர், அமைச்சர், துர்ச் சனர், கோளர் தூதரோடு
மாறுத மர்ம முடையோர்,
வலுவர்,கரு ணீகர்,மிகு பாகஞ்செய் தன்னமிடு
மடையர், மந்திர வாதியர்,
சொன்னமுடை யோர், புலையர், உபதேச மதுசெய்வோர்,
சூழ் வயித்தியர், கவிதைகள்
சொற்றிடும் புலவர் இவர் பதினைந்து பேரொடுஞ்
சொர்ப்பனந் தனி லாகினும்
நன்னெறி அறிந்தபேர் பகைசெய் திடார்கள் இந்
நானிலத் தென்பர் கண்டாய்,
நாரியோர் பாகனே! வேதாக மம் பரவு
நம்பனே! அன்பர் நிதியே!
அன்னமூர் பிரமனுங் கண்ண னுங் காணாத
அண்ணலே! அருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

40. இதா இதஞ்செய்து பயன் கொள்வன

சுவைசேர் கரும்பை, வெண் பாலைப், பருத்தியைச்
சொல்லுநன் னெல்லை, எள்ளைத்,
தூய தெங்கின் கனியை, எண்ணாத துட்டரைத்,
தொண்டரைத் தொழு தொழும்பை,
நவைதீரு மாறு கண் டித்தே பயன்கொள்வர்.
நற்றமிழ்க் கவி வாணரை,
நலமிக்க செழுமலரை, ஓவியம் எனத்தக்க
நயமுள்ள நாரியர்தமைப்,
புவிமீதில் உபகார நெஞ்சரைச், சிறுவரைப்
போர்வீரரைத், தூயரைப்,
போதவும் பரிவோ(டு) இதஞ்செய்து மிகுபயன்
புகழ்பெறக் கொள்வர், கண்டாய்.
அவமதி தவிர்த்தென்னை ஆட்கொண்ட வள்ளலே!
அண்ணலே! அருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

41. இல்லறம்

தந்தை, தாய், சற்குருவை, இட்டதெய் வங்களைச்,
சன்மார்க்க முள மனைவி யைத்,
தவறாத சுற்றத்தை, ஏவாத மக்களைத்,
தனைநம்பி வருவோர் களைச்,
சிந்தைமகிழ் வெய்தவே பணிவிடைசெய் வோர்களைத்,
தென்புலத் தோர் வறிஞரைத்,

தீதிலா அதிதியைப், பரிவுடைய துணைவரைத்,
தேனுவைப் பூசுரர் தமைச்,
சந்ததஞ் செய்கடனை என்றுமிவை பிழையாது
தான்புரிந் திடல் இல் லறம்
சாருநலம் உடையராம் துறவறத் தோருமிவர்
தம்முடன் சரியா யிடார்.
அந்தரி உயிர்க்கெலாம் தாய்தனினும் நல்லவட்(கு)
அன்பனே! அருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

42. புகழுக்குரிய குணங்கள்

பருகாத அமு(து), ஒருவர் பண்ணாத பூஷணம்
பாரின் மறையாத நிதியம்,
பரிதிகண் டலராத நிலவுகண் டுலராத
பண்புடைய பங்கே ருகம்,
கருகாத புயல்,கலைகள் அருகாத திங்கள்,வெங்
கானில் உறையாத சீயம்,
கருதரிய இக்குணம் அனைத்துமுண் டானபேர்
காசினியில் அருமையாகும்.
தெரியவுரை செய்யின், மொழி, கீர்த்தி, வரு, கல்வியொடு,
சீரிதயம், ஈகை, வதனம்,
திடமான வீரம்இவை யென் றறிகு வார்கள்இச்
செகமெ லாங் கொண்டாடவே
அருள்கற்ப தருவென்ன ஓங்கிடும் தானதுரை
ஆகுமெம தருமை மதவேள்

179996 சென்னை-600 008.

அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

43. திருமாலின் தசாவதாரம்

சோமுகா சுரனைமுன் வதைத்தமரர் துயர்கெடச்
சுருதிதந் தது மச்சமாம்;
சுரர்தமக் கமுதீந்த தாமையாம்; பார்போற்
சுருட்டிமா நில மெடுத்தே
போமிரணி யாக்கதனை உயிருண்ட(து) ஏனமாம்;
பொல்லாத கனகன் உயிரைப்
போக்கியது நரசிங்கம்; உலகளந் தோங்கியது
புனித வாமன மூர்த்தியாம்;
ஏழுறும் இராவணனை வென்றவன் இராகவன்;
இரவிகுலம் வேரறுத் தோன்
ஏர்பரசு ராமன்;வரு கண்ணனொடு பலராமன்
இப்புவி பயம் தவிர்த்தோர்;
ஆமினிய கற்கியினி மேல் வருவ(து) இவைபத்தும்
அரிவடிவம், அருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே.

44. சிவமூர்த்தி

பிறைசூடி, உமைநேசன் விடையூர்தி, நடமிடும்
பெரியவன்,உயர் வதுவை வடிவன்,
பிச்சாட னன்,காம தகனன், மறலியைவென்ற
பெம்மான், புரந் தகித்தோன்,

மறமலி சலந்தரனை மாய்த்தவன், பிரமுன்முடி
 வெளவினோன், வீரே சுரன்,
மருவுநர சிங்கத்தை வென்றஅரன், உமைபாகன்,
 வனசரன், கங்காள னே,
விறன்மேவு சண்டேச ரக்ஷகன், கடுமாந்தி
 மிக்கசக் கரம் உதவினோன்,
விநாயகற் கருள்செய்தோன், குகனுமை யுடன்கூடி
 மினிரேக பாதன், சுகன்,
அறிவரிய தக்ஷிணு மூர்த்தி யொ(டு) இலிங்கமாம்
 ஐயனே! அருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
 அறப்பளீ சுர தேவனே.

அறப்பளீசுர சதக சாரம்

அரும்பதவுரை

காப்பு: உம்பர்கோன் - தேவர்களுக்குத் தலைவன். ஓங்கு - உயர்ந்த. அறப்பளீசுரன்-சதுர கிரியில் எழுந்தருளியுள்ள சிவ பெருமான். சதகம் - நூறு செய்யுள் கொண்ட பிரபந்தம். அம் புவி - அழகிய உலகம். துதிக்கை உள்ளான் - தோத்திரங்களை உடையவன்; துதிக்கை உள்ளான்-தும்பிக்கையை யுடைய விநாயகக் கடவுள். காப்பு - காப்பாயிருக்கக் கடவன்.

1. கடல் உலகு - கடல் சூழ்ந்த உலகம். எழு பிறப்பு - எழு வகைப் பிறப்பு. அவையாவன: தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம். கருத - ஆலோசிக்கு மிடத்து. காட்சி பெறு நர ஜன்மமாய்-அறிவையுடைய மனிதப் பிறவியாய். கற்புவழி - கற்புள்ள சந்ததி. மாசு இல் வழி - குற்றம் இல்லாத நன்னெறி. நெடிய தனவான் - பெரும் பாக்கியவான். நீள் நிலம் - பெரிய நிலவுலகம். நேசம் - விருப்பம். மோழை யென்னும் அரசன் பெற்ற தலைவன். அனுதினமும் - நாள் தோறும்.

2. கனயோக சாதகன் - மேலான யோகங்கள் பொருந்திய (கிரக நிலை யுடைய) சாதகத்தை யுடையவன். மங்குதல் - கெடுதல். மறுது - தடுக்காமல். வழிபாடு - வழிபடுதல். வழிவழி வரும் - வழிவழியாய் வருகின்ற. தேவதா பத்திபுரி மார்க்கமும் - (குல)தெய்வபக்தி செய்கின்ற நெறியும். தீர்க்க ஆயுளும்- நெடிய ஆயுளும். இங்கிதம் - இனிமை. அங்கச விரோதியே - மன்மதனுக்குச் சத்துருவே. சோதியே - ஒளியுருவனே!

3. எய்து துயர் - வந்த துக்கம். கோது இல் புகழ் - குற்றமில்லாத கீர்த்தி. நிந்தை - பழி. ஐந்து தலை சீறு அரவம் -

ஐந்து தலைகளையுடைய சீறுகின்ற பாம்பு. மணிவாய் தோறும் - அழகிய வாய்கள் தோறும். கூடு உற்ற - சேர்ந்த. இரை - உணவு. ஐந்து தலை நாகம் தன்னுடைய ஐந்து வாய்களாலும் எடுக்கும் ஆகாரத்தை ஓர் உடலில் எங்ஙனம் சேர்க்கின்றதோ அதுபோல, ஒரு குடும்பத்திலுள்ள சகோதரர்கள் ஒற்றுமையாக இருந்து சம்பாதித்துக் குடும்பமாகிய உடலைப் போஷிக்க வேண்டும் என்பது. ஆடி சிவந்த - நடனம் ஆடிச் சிவப்பேறிய. செந்தாமரைப் பாதன் - செந்தாமரை போன்ற பாதங்களை யுடையவன். தில்லைச் சபையில் சிவபிரான் நடனம் ஆடுபவராதலால் ஆசிரியர் இங்ஙனம் கூறினர் என்க. அண்ணல் - பெருமை யுடையவன்.

4. வைதாலும் - திட்டினாலும். சீறி - கோபித்து. மாறாது - இடை விடாது. கனிவொடு - அன்பொடு. பணிவிடை புரிந்து - தொண்டு செய்து. புனித ! - பரிசுத்தனே ! தத்வம் செய்து - சமர்ப்பித்து. போற்றி - வணங்கி. பரவி - வழிபட்டு. சத்சிஷர் - நல்ல மாணாக்கர். வினைவேர் அறும்படி - வினையின் மூலம் அறும்படி. மிக்க தேசிகரது கடன்-மேலான ஆசிரியனது கடமை. புரம் - திரிபுரம். பொடிபட - பொடியாக. செம்மலே - பெரியோனே.

5. போதவும் - மிகவும். கவிஞர் - வித்துவான்கள். தமர் - உறவினர். ஆதுலர் - வறிஞர். வறிதின் - வீணாக. மார்க்கம் அறியா-வழி அறியாத. கங்கா குலத் தலைவன்-கங்கா குலாதிபன்.

6. மருவ ஒண்ணாது - சேரலாகாது. வாது - வாய்ச்சண்டை. அயல் கோதையர்கள் - அந்நியப் பெண்கள். கோள் உரைகள் - கோள் சொற்கள். நஞ்சு - விஷம். பெருக்கு - நீர்ப்பெருக்கு.

7. வாழ்மனை தனக்கு - இல்லறம் பூண்டவன் வாழ்கின்ற வீட்டுக்கு. குல மங்கை - நற்குலத்தில் பிறந்த பெண். மாநிலம் - பெரிய பூமி. தூய தவம்-பரிசுத்தமாகிய தவம். சீலம் - ஆசாரம். சௌரி - திருமால். மலரோன்-பிரமன். அமரர் - தேவர். முச்சுடர் - சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மூன்று சுடர்கள். சரணம் - அடைக்கலம். ரக்ஷி - காப்பாற்று. உதித்துவரு -

தோன்றி யெழுந்த. கண்டம் - கழுத்து. தேவர்களும் அசுரர் களும் சேர்ந்து திருப்பாற்கடலைக் கடைந்த காலத்து எழுந்த விஷத்தைச் சிவபெருமான் உண்ட வரலாறு இங்கே குறிக்கப் படுகின்றது.

8. பூத தயை-உயிர்களிடத்தில் காட்டும் கருணை. சற்சனர் - நல்லொழுக்க முள்ள ஜனங்கள். மிடி-தரித்திரம். நீதி அகல்-நீதி யற்ற. அருந்ததி - வசிஷ்டருடைய மனைவி; இவள் கற்பிற் சிறந் தவள். நெறி-கற்பு நெறி. இங்கிதம் - மனைவிக்குரிய நல்ல குணம். ஈனர் - இழிகுணத்தார். புல்லர் - அற்பர். கவிவாணர்-கவிபாடும் வித்துவான்கள். ஆதரவு - இரக்கம், அன்பு. என் சொலாய் - யாது சொல்லக்கடவை. அமல - பரிசுத்தனே!

9. வாலிபம் - சிறு வயது, இளம்பிராயம். வளைகடல்-பூமி யைச் சுற்றியுள்ள சமுத்திரம். வளர் அறம் - வளர்கின்ற தரு மம். த்யாகம் - பரிசில், சன்மானம், ஞாலம் - பூமி. நாட்ட வேண்டும் - நிலைபெறச் செய்யவேண்டும். நம்பன் - சிவபெரு மான். இணை அடி - இரண்டு பாதங்கள். ஆலம் - விஷம். பூதி- விபூதி. திருநீறு முண்டனே! - திருநீற்றை யணிந்த நெற்றியை யுடையவனே! அனக - பாப மில்லாதவனே!

10. இரவாது-யாசிக்காமல். சந்ததம்-எப்போதும். தரணி - உலகத்தார். புகழ்தரு - புகழ்கின்ற. மட்டு இல்லாமல் - அளவில் லாமல். ஈந்து - கொடுத்து. புரப்பவன் - காப்பவன். பொருவு இல் - ஒப்பில்லாத. செங்கண்மால் - சிவந்த கண்களை யுடைய ஸ்ரீ மஹாவிஷ்ணு. நரன் - மனிதன். மஹாதேவன்-சிவபிரான். அல் - இருள்போல் கறுத்த. மட்டுவார் குழலி - தேனொழுகும் நீண்ட கூந்தலை யுடையவளாகிய உமாதேவி. பாகனே - உமா தேவியை ஒரு பாகத்திலே யுடையவனே. ஏகனே-ஒப்பற்றவனே.

11. நெடிய - நீண்ட. பெருவேங்கை - பெரிய வேங்கைப் புலி. தழுவலாம் - அணைக்கலாம். நீள் அரவு - நீண்ட பாம்பு. பூணலாம் - தரிக்கலாம். பார் - பூமி. மரப்பாவை - மரத்தாற் செய்யப்பட்ட பிரதிமை. ஏர் மேவும் - அழகுள்ள. கடையுற்ற -

கடைந்து. சற்றும் இல்லாத - சிறிதும் இல்லாத. ஆர் மேவும் - அருமை பொருந்திய. கொன்றை புனை வேணியா - கொன்றை மலர் மாலையைத் தரித்த சடைமுடியை யுடையவனே. சுரர் - தேவர்கள். பரவும் - துதிக்கும்.

12. அடைக்கலம் - அபயம் என்று சரண் புகுதல். அஞ்சாமல் - பயப்படாமல். சித்தம்-மனம். 'தொடுத்து ஒன்று' என்பதை 'ஒன்று தொடுத்து' என்று மாற்றிக் கூட்டுக. தொடுத்து - ஆரம்பித்து. தோன்றல் - சிறந்த புருடன். நூறி-சிந்தித்து. மகா மேரு- உயர்ந்த மேருமலை; மலையைப் போன்று நிலை கலங்கா திருப்பவன் என்பது பொருள். அடுக்கின்ற - அடுத்தவர்களின். இடர் - துன்பம். தியாகி - கொடையாளன். உசிதன் - மேலானவன். அடர்கின்ற - (பகைவரைக்) கொல்லுகின்ற. முத்தலைச் சூலம் - மூன்று கூரிய நுனிகளை யுடைய சூலாயுதம். லோலன் - திருவிளையாடல்களைப் புரிபவன்.

13. நற்பரி - நல்ல குதிரை. நாகரிகர் - சிறந்த ஒழுக்கமுடையவர். மா மனை - சிறந்த வீடு. நளின மலர் - தாமரை மலர். கூவிளந்தரு - வில்வ மரம். நறை - வாசனை. பை துளவு - பசுமையான துளசி. கற்பு உடையர் வடிவிலே - கற்புள்ள மாதரது உருவத்திலே. கடிநகர் - காவல் அமைந்த நகரம். கதிர் பெறு விளக்கு - ஒளிபெற்ற விளக்கு. பொற்பு - அழகு. மிக்கோர்கள் - மேலோர்கள். பொய்யாத பேர் பாலிலே - பொய் சொல்லாதவ ரிடத்திலே. பூ - அழகிய. தடாகம் - குளம். போதகம் - யானைசிரசு - தலை. அல் பொரும் கோதை - இருளையொத்த கரிய கூந்தலை புடைய மங்கை (செந்தாமரை மலரில் வீற்றிருக்கின்ற இலக்குமி.)

14. மிதம் இன்றி - அளவு இல்லாமல். மிகு பாஷையோர் - அதிகமாய்ப் பேசுவோர். மிக்க பாதகர் - பெரும்பாவிகள். மலினம் - அழுக்கு. கடிநாய் எனச் சீறி - கடிக்க ஓடி வருகின்ற நாய் போலக் கோபித்து. கன்னி வாழ் மனை - பெண் வாழ்கின்ற வீடு. ததி - தயிர். கடம் - குடம். கர்த்தபம்-கழுதை. சார்ந்த-பொருந்

திய. ஆட்டின் திரள்-ஆடுகளின் கூட்டம் (மந்தை). சாம் பிணம்- செத்த பிணம். கவலைபுரி - விசாரத்தைத் தருகின்ற. தௌவை மூதேவி. மலைமங்கை - மலையரசன் பெற்ற பார்வதி தேதி.

15. மணம் அற்ற - வாசனை இல்லாத. செம்முருக்கு - செம் முருக்க மரம். அலர்ந்து - மலர்ந்து. மதுரம் - இனிப்பு. உவர்க் கடல் நீர் - உவர்ப்புச் சுவையுள்ள சமுத்திர ஜலம். பேய்ச்சுரை - பேய்ச்சுரைக் கொடி. ஓங்கும் மிடி-மிக்க தரித்திரம். அணி உற்ற- அழகு பொருந்திய. பைங்கொன்றை மாலிகாபரணனே! - பசிய கொன்றை மாலையை ஆபரணமாக உடையவனே! ஆதியே! - முதல்வனே!

16. தறிபட்ட - வெட்டுப்பட்ட. பழுதாயினும் - பழுது அடைந்தாலும். சார் மனம் - அதனிடம் பொருந்திய வாசனை. பழுதுபடுமோ - குறையுமோ. சுவறிட - சுண்ட. சாரம் மதுரம்- (பாலின்) சாரமாகிய இனிப்பு. நிறைபட்ட கதிர்மணி - நிறைந்த ஒளியுள்ள இரத்தினம். நீள் குணம் - பெரிய குணமாகிய ஒளி. கறைபட்ட - கருமை பொருந்திய. பை புயல் - பசிய மேகம். கதிர் மதி - சூரிய சந்திரர். கனம் - மேன்மை. காசினி தன்னில் - உலகத்தில். அறிவு உற்ற பேரை-அறிவு பொருந்திய ஞானியரை.

17. வெறி கொண்ட மற்கடம் - பைத்தியம் பிடித்த குரங்கு. இயற்கையில் இதுமிக்க சேஷ்டை பண்ணும் குணத்தையுடையது. வெம் - கொடிதாகிய. காஞ்சொறி புதல் - பூனைக்காஞ்சொறிப் புதர்; இது ஒருவகைப் பூண்டு; இது உடம்பில் பட்டதும் தினவையும் அரிப்பையும் உண்டாக்கும். சன்மார்க்கம் - சாந்தமாகிய நல்வழி. மேவுமோ - பொருந்துமோ. மிக்க குவலயம் தன்னில் - பெரிய பூமியில். நிதானம் - பொறுமை. ஈகை -கொடை. அறைகின்ற - சொல்லுகின்ற. சுருதி - வேதம். வள்ளலே - கொடையாளனே!

18. தமையன் - முன்பிறந்த சகோதரன்; அண்ணன் இடர் - ஆபத்து. ஒன்னார் - பகைவர். மெலிவு - தளர்வு. இட்ட

தெய்வம் - இஷ்ட தேவதை. பந்து - உறவு. இருதயம் - நினைவு, கருத்து. சுதன் - குமாரன். அம் - அழகிய. நாரமும் - கங்கையை யும். பணியும் - பாம்பையும். புனையும் - தரிக்கின்ற. சிவபிரான் கங்கையைச் சடை முடியில் தரித்திருப்பதையும், பாம்பை ஆபர ணமாகப் பூண்டிருப்பதையும் ஆசிரியர் இங்கே குறிப்பிடுகின்றார்.

19. திண்கரி - பலமுள்ள யானை. திகழ்ந்த - விளங்குகின்ற. வாவி - குளம். திரள் ஏரி - திரண்ட பெரிய ஏரி. ஒத்த நுண் பஞ்சு - ஒன்றற்கொன்று ஒத்த நுட்பமாகிய பஞ்சு. உடுத்திடும் - உடுத்திக் கொள்ளும். கலை - ஆடை. ஓங்கிவரு - உயர்ந்து வரு கிற. சீலை - துணி. உயர் - உயர்ந்த. கவிகை - குடை. தண்டுலம்- அரிசி. மல்கும் - மிகுந்த. நேயமொடு - அன்போடு. அற்ற கனி யைப் பொருத்த அரி-அப்படிபட்ட கனியைப் பொருத்தின ஸ்ரீ கிருட்டினனும்: மரத்தினின்றும் பறித்த மாங்கனியை மீட்டும் மரத்தில் பொருத்திய வரலாறு மகாபாரதத்தி லுள்ளது.

20. தாம்பூல தாரணம் - தாம்பூலம் தரித்தல். சூனியம் - பாழ். சற்குணர் - சாதுஜனங்கள். மிக்க தேசச் சூனியம் - மேன் மையாகிய நாட்டுக்குப் பாழாகும். வீறு சேர்-மேன்மை யமைந்த கிருகம் - வீடு. சோம்பாத - சோம்பல் இல்லாத. சபா - சபை. தொல் உலகில் - பழமையாகிய உலகில். மாநிதியம் - பெரும் பொருள். சுத்த சூனியம் - முழுப்பாழ். ஆம்பல் வதனத்தனை - யானை முகனாகிய விநாயகனை. குகன் - முருகன். என்று அருள் செய்த - பெற்று அருளிய. அத்தனே - சுவாமியே!

21. புறம் சொல்லும் - வெளிப்படச் சொல்லும். முகடு ஏறி - முன்னிடத்தில் வந்து. பண்பு உற்ற - நற்குணம் அமைந்த. சுற்றம் - உறவினர். பழிதொழில் பழித்தற்குரிய இழிதொழில். பற்று அற்ற பேர்க்கு-ஆதரவில்லாதவர்களுக்கு. முன் - முன்னே. பிணை நின்று - பிணை பட்டு நின்று; உத்திரவாதியாய் நின்று. பின்பு போய் - ஆபத்துக்காலத்தில் அல்லாமல் அதற்குப் பின்பு சென்று. பரிதவித்தல் - வருந்துதல். இரவலர் - யாசகர். காய்ந்து வீழ்ந்திடும் - சிறி விழுகின்ற. அண்கற்ற - அடுத்தலைக்கற்ற

நாவலர் - நாவலூரர், சுந்தர மூர்த்தி நாயனர். சிவபிரான் சுந்தரமூர்த்தி நாயனர் பொருட்டுப் பரவை நாச்சியாரிடத்திற்குத் தூதாகச் சென்ற வரலாறு இங்குக் குறிப்பிடப் படுகின்றது.

22. தளசேகரங்கள் - சேனைகளைச் சேகரித்தல். கனக்கின்ற வித்துவான் - மேன்மை பொருந்திய பெரிய வித்துவான். நத்த வேண்டும் - அடுக்க வேண்டும். காசினி - பூமி. கருத்துள்ள ஆலோசனையுள்ள. தொனிக்கின்ற - ஒலிக்கின்ற; பாடுகின்ற. சாமர்த்தியன் - வல்லவன். சுதி - யாழ் நரம்பு; சுதி கூட்டலாவது, முதல் நாதமாகிய ஷட்மத்தோடு பஞ்சமம் என்னும் ஸ்வரம் பொருந்தும்படி செய்தல். சுடர் விளக்கு - ஒளியுள்ள விளக்கு. தூண்டு கோல் - தூண்டிவிடுங்கோல். அனல் கண்ணன் - நெருப்புக் கண்ணன். சிவபிரானுக்கு நெற்றியில் நெருப்புக்கண் இருப்பது இங்கே குறிப்பிடப்படுகின்றது. படிக சங்கம் நிகர்வண்ணன் - படிகக் கூட்டம் போலும் (வெள்ளிய) நிறத்தையுடையவன். படிகம், சங்கம் என்பதாகக் கொண்டு. படிகம் போலும் சங்கம் போலும் என்றும் உரை கொள்வர். படிகம் - பளிங்குக் கல்: 'ஸ்படிகம்' என்னும் வடமொழியின் சிதைவு.

23. மிக்க அதிரூபம் - மிகவும் அதிகமான அழகு. சற்குணம் - நற்குணம். மானி - மானமுடையவன்; பெருமையுடையவன். பால் ஆன மொழி உடையவன் - பால் போலும் இனிய சொல்லை உடையவன். ஆசாரபரனுய் - நல்லொழுக்கத்திற் சிறந்தவனுய். பாக்கியம் - செல்வம். வாலாயமாய் - சாதாரணமாய். தூறு - பழி. ஆலாலம் - ஆலகாலம், நஞ்சு.

24. இரப்பவன் - யாசிப்பவன். ஈனன் - இழிந்தோன். ஈகின்ற - கொடுக்கின்ற, உரைக்கின்ற பேச்சிலே பலன் உண்டு எனக் காட்டி - சொல்லுகின்ற, சொல்லிலே பலன் உண்டென்று தோன்றும்படி காண்பித்து. உதவிடான் - உதவி செய்யாதவன். வாக்கு உரைத்து - வாக்குக் கொடுத்து. உலுத்தன் - லோபி. பரக்கின்ற - திரிகின்ற. பலகால் - பலதடவை. கொடிய பாவி- கொடும்பாவி. அரக்கு இதழ் - செந்நிறத்தோடு கூடிய பூவிதழ்,

குமுதம்-அல்லி. 'அரக்கு இதழ் குமுதவாய்' என்பதற்குச் செந் நிறமுள்ள உதட்டையும், செவ்வல்லி மலர் போலும் வாயையும் உடைய என்று பொருள் கொள்ளுதலும் பொருந்தும். உமை நேசன் - பார்வதி தேவிக்கு அன்பன். எளியர் அமுதன் - ஏழை அன்பர்களுக்கு அமுதம் போன்று இனிமையுடையவன்.

25. வாவி - தடாகம். கூபம் - கிணறு. ஆறு - நதி. அருகு - சமீபம். காதம் - ஏழரை நாழிகை வழி. தூரத்துக்கு ஒரு அளவைப் பெயர்; பத்துக்கல் தூரம். கமுகு - பாக்குமரம். தெங்கு - தென்னமரம். காவி - நீலோற்பல மலர். கமலம் - தாமரைமலர். குவளை - கருநெய்தல் மலர். சேர் - படர்ந்த மறை வல்லோர் - வேதியர். மறை - வேதம். காவலன் - அரசன். இருக்கை - இருப்பிடம், அரசன் வாசஞ் செய்யும் அரண்மனை. அணி - அலங்கரிக்கப்பட்ட. சிறக்க - சிறப்பாக. சொர்க்க வாசம் - சுவர்க்கலோக வாழ்வு. அறையலாம் - சொல்லலாம்.

26. முழுக்காடு நாள் - தலையில் தைலமிட்டு முழுகுவதற்கு நன்னாள். ஆதிவாரம் - ஞாயிற்றுக்கிழமை. வடிவம் - உருவம். அங்காரக வாரம் - செவ்வாய்க்கிழமை. இடர் - துன்பம். திரு மேவு - அழகு பொருந்திய. செம் - செவ்விய. பொன் - வியாழக் கிழமை; வியாழக்கிழமை அல்லது குருவாரத்துக்குப் 'பொன்' என்று சொல்வது ஜோதிடநூல் மரபு. சேதம் - நஷ்டம். பரிகாரம் - (முழுக்காடுவதற்கு ஆகாத நாளில் முழுக்காட வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அதற்குப்) பிராயச்சித்தம். அலரி - அலரிப்பூ. பௌமன் - செவ்வாய். செழுமண் - செம்மண். பச்சறுகு-பசுமையாகிய அறுகம்புல். எருத்தூள்-எருமுட்டைப்பொடி. ஒளி-பிரகாசம். பார்க்கவற்கு - வெள்ளிக்கிழமைக்கு. அரிது ஆய் - அருமையாய். முழுக்காடுவார் - தலை முழுகுவார்கள்.

27. மருத்துவன் - வைத்தியன். தாது பரீக்ஷை - நாடி சோதனை. தன்வந்திரி - தேவ வைத்தியர்; தேவர்களும் இராக்கதர்களும் சேர்ந்து திருப்பாற்கடல் கடைந்த காலத்து அதினின்றும் தோன்றியவர். கும்பமுனி - அகத்தியர்; குடத்தில் தோன்

றியவராதலால் இவருக்கு இப்பெயர் வந்தது. தேரர் - தேரையர். கொங்கணர் - கொங்கணமுனி. சித்தர் - சித்தர் வகையில் சேர்ந்த சித்த முனிகள். வாகடம் - வைத்திய நூல். பேதம் - வேறுபாடுடைய. குளிகை - மாத்திரை. சுத்திவகை - (மருந்து சரக்குகளைச்) சுத்தி செய்யும் விதம். மாத்திரை பிரயோகம் - மாத்திரையைக் கொடுக்கும் முறை (நிதானம்). பிழையாது - தவருமல். லட்சணம் - இலக்கணம். குணவாகடம் - பதார்த்தங்களின் குணத்தைத் தெரிவிக்கும் நூல். மூலிகா விதம் - மூலிகை வகைகள். நிகண்டு - சொற்பொருளை அறிவிக்கும் நூல்; அகராதி வரிசையாய்ச் சொற்களுக்கு அர்த்தத்தைத் தெரிவிக்கும் நூல். தூய - பரிசுத்தமான. சொல் பக்குவம் - முன்னோரால் சொல்லப்பட்ட பக்குவ முறை. ரோக நிண்ணயம் தோற்றி - நோய் நிச்சயத்தை வெளியாக்கி. அமிர்தகரன் - மிருத்துவாகிய மரணத்தை யொழிக்கும் அமிர்தத்தைப் போன்று கைராசி யுடையவன். ஆயுர்வேதன் - வைத்திய சாஸ்திரி.

28. வேட்டல்-விவாகஞ்செய்தல். வேட்டகம் - விவாகஞ் செய்து கொண்ட மனைவியின் தாயார் வீடு; மாமனர் மாமியார் வீடு. வீண் உரை - பயனில்லாத வார்த்தை. அவரின் வீணர் - அவரினும் வீணர். விருந்து கண்டு - விருந்தினரைக் கண்டு. இல்லாள் தனக்கு - மனைவிக்கு. விரகு இல்லோர் - விவேகம் இல்லாதவர். நாட்டம் தரும் - ஆராய்ச்சி பண்ணும் அறிவைத் தரும்; நாட்டம் - கண்; நாட்டந்தருங் கல்வி - அகக்கண்ணையும் முகக் கண்ணையும் தரும் கல்வி என்பதுமாம். அகக்கண் - ஞானமாகிய கண். நாடி - ஆராய்ந்து. நானிலம் - பூமி; குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நால்வகைத்தான பகுதியையுடைய நிலம் இருத்தல் பற்றி, பூமிக்கு நானிலம் என்று பெயர் வந்தது. நரர் - மனிதர். தேட்டறிவு இல்லாத - சம்பாத்தியஞ் செய்யும் அறிவு இல்லாத. சேர் - பொருந்திய. ஒரு வருத்தும் இன்றி - ஒரு வரும்படியும் இல்லாமல். ஆட்டம் செய்யும்-நடனஞ் செய்கிற. பதம் அம்புயம் - பாத தாமரை. முடியின்மேல் - தலையின்மேல்.

29. பொய்யாத வாய்மையும் - பொய்க்காத சொல்லையும் சீலம் - நல்லொழுக்கம். சார்ந்துளோர் - பெற்றிருப்பவர்கள். பூவலம் - பூமியை வலமாகச் சுற்றி வருதல். நன்னெறி - நல்வழி. நையாத - அழியாத. காமத்தை - ஆசையை. மனோ சுத்தி - மனப் பரிசுத்தம். நதி படிந்திட - நதியில் மூழ்க. அடியர் - அடியார்; சிவனடியார். பரவுவோர் - துதிப்போர். பதம் - பாதம்; திருவடி. வானவரை - தேவதைகளை. அர்ச்சனை - பூசனை. ஐயாறு - திருவையாறு. கமலை - திருவாரூர். சோணசலம் - சோணசைலம்; திருவண்ணமலை. தில்லை - சிதம்பரம்.

30. பதின்மரில் ஒருத்தர் - பத்துப்பேரில் ஒருவர். பாடுவோர் - கவிபாட வல்லவர். விதி தப்பாது - முறை தவறாமல். ப்ரசங்கம் - உபந்நியாசம். இதயம் - மனம். புவி - பூமி. இலக்கம் - இலக்ஷம். துதி பெருக வரும் - மிகுதியாய்த் தோத்திரம் செய்யும் படி தோன்றின. மூன்று காலம் - முக்காலம்; இறந்த, நிகழ், எதிர் காலங்கள் மூன்று. ஏகாம்பரம் - காஞ்சிபுரம்; ஏகாம்பரேசுரன் எழுந்தருளிய திருத்தலம் ஆதலில் காஞ்சிபுரத்திற்கு ஏகாம்பரம் எனப்பெயர் வந்தது. கைலை - கைலாயம். சூழும் அவிநாசி- அன்பர்கள் சூழப்பெற்ற அவிநாசி. வெண்காடு - திருவெண்காடு. செங்காடு - திருச்செங்காடு. காளத்தி - திருக்காளத்தி. அத்தனே - தலைவனே!

31. புதிய சீலை - நூதன ஆடை. கலைமதி - கலைகளையுடைய சந்திரன்; சந்திரனின் தினமாகிய திங்கட்கிழமை. பலகாலும் - பல தடவையும். கடிது நினைவுற்று - மிகுதியாக நினைந்து. குறைபடாது இடர் வரும் - குறையாமல் துன்பம் உண்டாகும். வீரியம்- சௌரியம். குரு திவாரம் - செவ்வாய்க்கிழமை. புந்தியில் - புதன் கிழமையில். குருவாரம்-வியாழக்கிழமை. மறைபடாது-கெடாது. அறைகின்ற - சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற. வேதம் ஆகமத்தின் வடிவாய் - வேதாகமங்களின் வடிவாய்.

32. வானரம் - குரங்கு. அரவம் - பாம்பு. சூகரம் - பன்றி. திவ்ய பாரத்வாசம்-பரிசுத்தமான கரிக்குருவி. புன் கூகை-அற்ப

மாகிய கோட்டான். சொல் பெருக மருவும் ஆந்தை - சொற்கள் மிகுதியாகப் பொருந்திய ஆந்தை. வெல் அரிய-ஜெயிப்பதற்கு அருமையான. காட்டு ஆன் - காட்டுப் பசு. இருநா உடும்பு - இரட்டை நாவை யுடைய உடும்பு. வலம் இருந்து இடம் ஆகில் - வலப் பக்கத்திலிருந்து இடப்பக்கத்திற்குச் சென்றால். ஒல்லையின்-விரைவாக. தலை தாக்கல் - தலையில் இடித்தல். ஒருதுடை இருத்தல் - ஒற்றைக்காலில் நிற்றல். பற்றல் - பிடித்தல். உபசுருதி சொல் - காதில் கேட்கும்படி சமீபித்துக் சொல்லுதல். அல்லல் - துன்பம். நல்ல அல்ல என்பர் - நல்லவை அல்ல வென்று சொல்வர். முதியோர் - பெரியோர்.

33. பேர் ஆன - பிரசித்தியான, பெரிதான. பேனம்-நுரை. தோஷம் - குற்றம். பெருகி வளர் - கலைகள் பெருகி வளர்கின்ற. வெண்மதி - வெள்ளிய சந்திரன். உள்ளுள் - உள்ளிடத்துள்ள. சீர் - சிறப்பு, மேன்மை. சீற்றம் - கோபம். தீது இல்-குற்றம் இல்லாத. முடி மன்னவர் - கிரீடந் தரித்த அரசர். ஒன்று செய்வது - ஒரு காரியம் செய்வது. தாராமை - கொடாமை. இரப்போர் - யாசிப்போர். கைப்பது - கசப்பது. தாலம் - நாக்கு. ஒரு நான் மறை - ஒப்பற்ற நான்கு வேதங்கள்; அவை இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என நான்காம். ஒளிரும் - விளங்குகின்ற.

34. படைக்கு - சேனைக்கு. துரகம் - குதிரை. மாணிக்கம் - விலையேறப் பெற்ற மாணிக்கம் என்னும் இரத்தினத்துக்குச் சமானம் ஆகும்; சேனைக்குத் தகுதியான குதிரை மாணிக்கத்தைப் போல் மதிக்கக்கூடிய பொருளாம் என்பது. புவி - பூமி. விவேகம் - அறிவு. துரை - பிரபு. பழுது அற்ற - குற்றம் அற்ற. அதிரூபவதி-மிக்க அழகுள்ளவள். கற்பு - பதிவிரதா தர்மம். பாவை-சித்திரப்பதுமை போன்ற அழகுடைய மாது. கலைகள் - சாஸ்திரங்கள். பாவலன் - கவிபாடுவதில் வல்லவன்; கவிஞன்; வித்துவான். ஒழிவு அற்ற - நீங்காத. தியாகி - கொடையாளி. உசிதன் - மேலானவன். உத்தம குலம் - மேலான குலம். வேதாகமத்தின் வடிவாய் - வேதாகமங்களின் உருவாய்.

35. தெள் அமிர்த தாரை-தெளிவாகிய அமிர்த தாரை. மதுரம் கதித்த - இனிமை மிகுந்த. பைந்தேன் - பசிய தேன். முத்தமிழ் - இயல், இசை, நாடகம் என்னும் மூன்று தமிழ்ப் பகுதி. நால் கவிதை - நான்கு வகைக் கவி; அவை: ஆசுகவி, மதுரகவி, சித்திரக்கவி, வித்தாரகவி. நாற்பொருள்-நான்கு பொருள்; அவை: அறம், பொருள், இன்பம், வீடு. உரை செய் திறமை - சொல்லுகிற திறமை. விள் அரிய - சொல்லுதற்கு அருமையான. காவியம் - பாவாலமைந்த கதா சரித்திர நூல்கள்; அவை: சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி போன்ற பெரும் பஞ்ச காவியங்கள். உட்பொருள் - கவிகளிலுள்ள அர்த்தம். அலங்கார விரிவு - அலங்காரத்தின் இலக்கண விரிவு; தண்டியலங்காரம் போல்வன. இலக்கண விகற்பம் - இலக்கண வேறுபாடுகள்; அவை: எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பனவாம். தொன்னூல் - பழைய நூல். உலகத்து இயல்பு - உலக வழக்கு. பிரபந்தம் - (சிறப்பித்துச் சொல்லப்படும்) பிரபந்த நூல்கள்; அவை தொண்ணூற்றாறு: பிள்ளைக்கவி, பரணி, கலம்பகம் முதலியனவாம். வண்மை - சிறப்பு. அலை அடங்கும் கடலை ஒத்து - அலை ஓய்ந்த சமுத்திரத்தை நிகர்த்து. அதிக சபை - மேன்மையான பெரிய சபை. ஓங்கு அலை ஒலிக்கின்ற கடல் போல் - உயர்ந்த அலைகள் எழுந்து சப்திக்கின்ற சமுத்திரத்தைப் போல. ப்ரசங்கம் - உபந்நியாசம். கவிஞன் - கவிராயன், வித்துவான். விடம் உண்ட - விஷத்தைச் சாப்பிட்ட. கனி வாயன் - கொவ்வைக் கனிபோற் சிவந்த வாயையுடையவன். நேயனே - அன்புள்ளவனே!

36. காண் அரிய - காண்பதற்கு அருமையான. தரிசனம் - பார்த்தல்; காட்சி. லபிப்பது - கிடைப்பது. கண் இணைகள் - இரண்டு கண்கள். பேணி - விரும்பி. துதி - தோத்திரம். வீண் நெறி - பயனில்லாத மார்க்கம். பணி விடை - தொண்டு. மேனி - தேகம். விழைவு - விருப்பம். பூருவ புண்ணியம், முன் செய்த புண்ணியம்; பூருவம் - முன். ஆணவம் - கர்வம்- செருக்கு. களை களைந்து - களையைப் பறித்து.

37. பரராசர் - அந்நிய அரசர். சால - மிகவும். கருமம் - காரியம். மந்திராலோசனை - இரகசியமான ஆலோசனை; மந்திரியாயிருப்பவன் அரசாங்கத்தலைவர்களோடு கூடி அரசாங்க காரியங்களை இரகசியமாக இருந்து ஆலோசித்தல். மதிமந்திரி - புத்திசாலியான மந்திரி. துன்னிய - நெருங்கிய. கரி - யானை. பரி - குதிரை. சூழ்ச்சியும் - சூழ்ந்து செய்கிற ஆலோசனையும். தோலாத - தோற்காத. திடமான சித்தி - உறுதியாக நிறைவேற்றுதல். சேனை அதிபன் - சேனைக்குத் தலைவன். அன்னையினும் - தாயினும், மலைமங்கை - மலையரசன் புதல்வி, பார்வதி. பங்கு ஆளன் - (சிவபிரான் தன் திருமேனியில் பார்வதியை இடப்) பாகத்தில் உடையவன்.

38. சீர்கேடு - சிறப்பு அழிவு, புகழ் அழிவு. உறவு அறுக்கும் - பந்துக்களைக் கூட வொட்டாது விலக்கும். ஈனம் - இழிவு, அற்பம். மறலி - யமன்.

39. அமைச்சர் - மந்திரிகள். துர்ச்சனர் - துஷ்ட ஜனங்கள். கோளர் - கோள் சொல்பர். மாறாத - நீங்காத. மர்மம் - கபடம். வலுவர் - பலசாலிகள். கருணிகர் - கணக்கர். மடையர் - சமையல் செய்பவர். சொர்னம் உடையோர் - பொன் உடையவர்கள், தனவந்தர். புலையர் - நீசர். உபதேசம் செய்வோர் - குருக்கள். கவிதைகள் சொற்றிடும் புலவர் - கவிகள் சொல்லும் வித்துவான்கள். சொப்பனம் - கனவு. நானிலம் - பூமி. நாரியோர் பாகன் - பார்வதியை இடப்பாகத்தே யுடைய சிவன். பரவும் - துதிக்கும். நம்பன் - சிவன். அன்பர் நிதியே - அடியவர்களின் ஐசுவரியமே! அன்னம் ஊர் பிரமன் - அன்னப்பறவையின் மீது ஏறி நடத்துகின்ற பிரமன். கண்ணன் - செந்தாமரை போன்ற அழகிய கண்ணை யுடையவன்; திருமால். சிவபிரானது அடியையும் முடியையும் பிரம விட்டுணுக்கள் ஒரு காலத்தில் பந்தயம் போட்டுத் தேடிக் காண முடியாமற் போயிற்று என்னும் புராண வரலாறு இங்கே குறிப்பிடப் பெற்றிருக்கின்றது.

40. இதா இதஞ் செய்தல் - நன்மையும் தண்டனையும் செய்தல். சில பொருள்களைப் போற்றிப் பயன் கொள்ளுதலும்

சில பொருள்களைக் கண்டித்தும் சேதித்தும் பயன் கொள்ளுத லும் இப்பாட்டில் கூறப்படுகிறது. சுவை சேர் - இனிய ருசி பொருந்திய. தூய - பரிசுத்தமான. தெங்கின் கனி - தென்னம் பழம்; முற்றின தேங்காய். எண்ணாத - மதியாத. தொண்டர் - அடிமையாளர். தொழு தொழும்பை - குற்றேவல் செய்வோர். நவை - குற்றம். கண்டித்தல் - தண்டனை செய்தல். நல் தமிழ் கவி வாணர் - நல்ல தமிழில் கவி பாடுவோர். நலம் மிக்க - நன்மை மிகுந்த. ஓவியம் - சித்திரம். நயமுள்ள - இனிமைக் குணமுள்ள நாரியர் - பெண்கள். உபகார நெஞ்சர் - உதவி செய்யும் மனமுள் ளவர். தூயரை - பரிசுத்தரான பெரியோரை. போதவும் - மிக வும். பரிவு - அன்பு. இதம் - நன்மை. அவமதி - துர்ப்புத்தி. வள் ளலே - உதாரகுண முடையவனே!

41. இல்லறம் - மனைவி மக்களுடன் வீட்டில் வாசஞ் செய்து விதிப்படி தருமஞ் செய்து ஒழுகுதல். சன்மார்க்கம் - நல்வழி. தவறாத சுற்றம் - பிழை செய்யாத பந்துக்கள். ஏவாத மக்களை - ஏவுதல் இல்லாமலேயே குறிப்பறிந்து செய்யும் புத்திரர் களை. சிந்தை - மனம். தென் புலத்தோர் - பிதிர் தேவர். வறி ஞர் - தரித்திரர். அதிதி - புதியனாய் வந்தவன்; விருந்தாளி. துணைவர் - சகோதரர். தேனு - பசு. பூசுரர் - அந்தணர். சந்த தம் - எப்பொழுதும். செய்கடன் - செய்ய வேண்டிய (நித்திய) கடமைகள். என்றும் - எக்காலத்தும். பிழையாது - தவறாமல். சாரும் - பொருந்திய. துறவு அறத்தோர் - மனைவி மக்க ளாதியோரைத் துறந்து தவ மேற்பூண்ட சந்நியாசிகள். சரியா யிடார் - சமமாக மாட்டார். அந்தரி - பார்வதி. தாய்தனினும் நல்லவட்கு - தாயினும் சிறந்த நன்மை செய்பவளுக்கு.

42. பருகாத - உண்ணாத. அமுது - அமிர்தம். பூஷணம் - ஆபரணம். நிதியம் - ஐசுவரியம். பரிதி - சூரியன். அலராத - மலராத. நிலவு - சந்திரன். பண்புடைய - குணமுடைய. பங் கேருகம் தாமரைமலர். கருகாத புயல் - கறுக்காத மேகம். கலைகள் அருகாத திங்கள் - கலைகள் குறையாத சந்திரன். வெம்

கானில் - வெம்மை பொருந்திய காட்டில். உறையாத - வசியாத சீயம் - சிங்கம். கருத அரிய - எண்ணுதற் கரிய. காசினி - பூமி. தோ்வு உரை செய் இன் மொழி - அறியும்படி பேசுகிற இனிமை யான சொல். சீர் இருதயம் - சிறந்த இருதயம். ஈகை - கொடைக் குணம். வதனம் - முகம். இச் செகம் - இவ்வுலகம். கற்பதரு - கற்பக விருக்ஷம்; இது தேவலோகத்தி லுள்ளது; விரும்பியதை அளிக்குந் தன்மை யுடையது. பருகாத அமுது என்பது இன் சொல். பண்ணுத பூஷணம் என்பது கீர்த்தி. மறையாத நிதி யம் என்பது கல்வி. பரிதிகண்டு அலராததும், நிலவு கண்டு உல ராததுமான பங்கேருகம் நல்ல இருதயம். கருகாத புயல் என் பது ஈகை. கலைகள் அருகாத திங்கள் என்பது முகம். கானில் உறையாத சீயம் என்பது வீரம்.

43. திருமாலின் தசாவதாரம் - ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பத்து அவதாரங்கள். அமரர் துயர்-தேவர்களது துக்கம். சுருதி-வேதம். மச்சம்-மீன் (மச்ச அவதாரம்.) சுரர்-தேவர்கள். ஈந்தது-கொடுத் தது. ஆமை-(கூர்ம அவதாரம்.) மாநிலம்-பெரிய பூமி. இரணியாக் கனை-இரணியாக்ஷனை, உயிர் உண்டது - பிராணனைக் கவர்ந்தது. ஏனம்-பன்றி (வராகாவதாரம்.) கனகன்-இரணியன். நரசிங்கம்- மனித உடலும் சிங்க முகமும் கூடிய பிறவி (நரசிங்காவதாரம்.) உயர்ந்தது - வளர்ந்தது. புனிதம்-பரிசுத்தம். வாமனம் - குள்ளம்; வாமனமூர்த்தி குள்ளமான திரு உரு தாங்கியவர் (வாமனாவதா ரம்.) எம் உறும் - களிப்படைந்த. இராகவன் - இராகவ குலத் துதித்த ஸ்ரீராமன் (ஸ்ரீராமாவதாரம்). இரவி குலம்-சூரிய குலம். வேர் அறுத்தோன் - அடியோடு அழித்தவன். ஏர் - அழகு. பரசு கோடலி. பரசுராமன் - கோடலியை ஆயுதமாகக் கொண்ட பரசுராமன் (பரசுராமாவதாரம்). புவி-பூமி. தவிர்த்தோர்-நீக்கிய வர். ஆம் இனிய-இனிதாகிய. கற்கி - கலியுகத்தில் தோன்றுபவர் (கற்கியவதாரம்.) அரி வடிவம் - திருமாலின் அவதாரங்கள்.

44. பிறை சூடி - மூன்றாம் பிறைச் சந்திரனைச் சடாமுடி யில் சூடியவன். உமை நேசர் - உமாதேவியின் அன்பன். விடை

ஊர்தி - எருதை வாகனமாகக் கொண்டு எறிச் செல்பவன. நட்டம் இடும் - நடனம் செய்யும். வதுவை வடிவன் - மணக்கோல உருவினன். காம தகனன் - மன்மதனை எரித்தவன். மறலி - யமன். பெம்மான் - பெருமான். புரம் தகித்தோன் - முப்புரங்களை எரித்தவன். மறம் மலி - வீரம் மிகுந்த. சலந்தரன் - சலந்தராசுரன். மாய்த்தவன் - கொன்றவன். வௌவினோன் - பறித்தோன். அரன் - சிவன். வனசரன் - வனத்தில் சஞ்சரிப்பவன் ; வேடன். கங்காளன் - கங்காளத்தைத் தரித்தவன். கங்காளம் - தேக தசையொழிந்த உடல் முழு எலும்பு. விறல் மேவும் - வெற்றி பொருந்திய. ரக்ஷகன்-காப்பாற்றுபவன். கடு-விஷம். கடு மாந்தி-விஷம் உண்டவன். குகன் - முருகன். மிளிர்-விளங்குகின்ற. எகபாதன் - சிவன். சுகன் - சுகரூபமா யிருப்பவன். அறிவு அரிய - அறிதற்கு அருமையான.

அறப்பளீசுர சதக சார அரும்பதவுரை

முற்றிற்று.

179994
சென்னை 600 008.

THE PROGRESSIVE PRINTERS, MADRAS.